www.tamilarangam.net

# பெண்கள் செய்தி மடல்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் 2:2, 2:3 ஜூன் - டிசம்பர் 2000

பொருளடக்கம்

1. இலங்கை பாராளுமன்றத் தேர்தலும் பெண்கள் பிரதிநிதித்துவங்களும்.
2. புத்தகக்கண்காட்சி.
3. "சக்தி" பெண்கள் குழு.
4. கலாசாரக் குழுவினரின் கண்காட்சி.
5. பெண்கள் குழுவினரின் ஒன்று கூடல்.
6. சூரியா நூலக விபரண ஒலிப்பதிவு நாடாக்கள்.
7. "தமிழ் இனி" – 2000.
8. பெண்களே நாம் முயன்றால் விடுபடலாம்.
9. கிராமியக் குழுக்களின் காலாண்டுக் கூட்டம்.
10. "உயிர் வெளி"......
11. "யாவரும் கேளிர்"
12. சூரியா நூலகம்.
13. தலைமைத்துவப் பயிற்சி.
14. கலாசாரக் குழுப் பாடல்.

*காலாண்டுக்கொரு முறை தொடர்ந்து மிளிரும் இப் பெண்கள் செய்திமடல் மக்கள் சிந்தனைகளைக் கிளறி அவர்கள் கருத் துக்களைப் பெற வேண்டும் என விழை கிறது. ஆகவே, தொடரும் எங்கள் பயணத்தின் பதிவுகள், உறுதியாய் அமைய உங்கள் பலமான எண்ணங்களை எதிர் பார்க்கிறது.*

–ஆசிரியர்–

## இலங்கையின் பாராளுமன்றத் தேர்தலும் பெண்கள் பிரதிநிதித்துவமும்

தேர்தல் கால அமளிதுமளிகள் எல்லாம் ஓய்ந்து யாருக்கு என்ன எவ்வளவு கிடைத்துள்ளது என்ற கணக்கெடுப்புக்களும் அதனை ஒட்டிய வியாக் கியானிப்புக்களும் தற்பொழுது நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. அவ்வகையில் நாமும் பெண்களிற்கு எவ்வளவு கிடைத்துள்ளது எனப் பார்ப்போம்!

'பெண்களின் அரசியல் பங்களிப்பு' என்னும் பரந்த தலைப்பினுள் அடங்கும் ஒருவிடையமாக 'பாராளுமன்ற அரசியலில் பெண்களின் பங்களிப்பு' அமைகின்றது. இலங்கையில் பெண்களுக்கு வாக்குரிமை 1931ம் ஆண்டில் பெற்றெடுக்கப்பட்டது. அவ்வாண்டிலேயே பெண்கள் தேர்தலில் நிற்கும் உரிமையும் பெற்றனர். அன்றிலிருந்து இன்றுவரை பாராளுமன்ற அரசியலில், பெண்களின் பங்களிப்பு 5.3% இற்கு உட்பட்டதாகவே இருந்து வருகின்றது.

இம்முறை தேர்தலில் பெண்கள் நிறுவ னங்களின்/பெண்நிலைவாதிகளின் கவனத்தை பல விடையங்கள் ஈர்த்துள்ளன.

1. இலங்கை வரலாற்றில் ஒப்பீட்டளவில் கூடுதலான பெண்கள் அபேட்சகர்களாக நியமனம் பண்ண ப்பட்டனர். எனினும் இந்தத்தொகை போதாது என்பது மறுபுறத்தில் கவனிக்கவேண்டிய விடை யம்).

2. இலங்கைப் பாராளுமன்ற அரசியலில் முதல் முறை யாக இரு முஸ்லிம் பெண்கள் பாராளுமன்ற உறுப் பினர்களாகியுள்ளனர். அவர்களில் ஒருவர் அமைச் சராகவும் ஆகியுள்ளார்.

3. கடந்த பாராளுமன்றத்தை விட (10 வது பாராளு மன்றம்) இம்முறை (11 வது பாராளுமன்றம்) பெண்களின் அங்கத்துவம் குறைந்துள்ளது. கடந்த பாராளுமன்றத்தில் பெண்களின் அங்கத்துவம் 4.3% மாக இருந்தது தற்பொழுது 3.5% மாகும். இந்த வீழ்ச்சி பெண்களின் அங்கத்துவத்தை அதிகரிக்க வேண்டும் என்ற குறிக்கோளிற்கு அச்சுறுத்தலாகும். 1995ல் வெளியிடப்பட்ட UNDP யின் அறிக்கை, அதனைத் தொடர்ந்து நடைபெற்ற பெய்ஜிங் மாநாட் டின் செயற்பாட்டிற்குரிய விடையங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆகியவற்றிற்கிணங்க 30% அங்கத்துவம் குறிக் கோளாகும். (set target) இது நீண்டகாலத்தில் 50% மாக அமையும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விடையங்களை அமுல்படுத்துவது தொடர்பாக பல அரசாங்கங்கள் வாக்குறுதிகளை அளித்தன. இலங்கையும் அதனை ஏற்றுக்கொண்டு கையெழு த்திட்டது. எனினும் இவ்விடையம் (அதாவது 30% அங்கத்துவத்தைப் பெண்களுக்கு ஒதுக்குதல் எனும விடையம்) இன்னமும் இலங்கையில் சட்டமாக்கப்படவில்லை.

இதுவரைகாலமும் இலங்கைப் பாராளுமன்ற அரசியலில் மூன்று தமிழ்ப் பெண்கள் அங்கத்துவராக இருந்துள்ளனர் (நேசம் சரவணமுத்து, ராசமனோகரி புலேந்திரன், ரங்கநாயகி பத்மநாதன்). இம்முறை ஒரு தமிழ்ப்பெண்தானும் அங்கத்தவராகவில்லை. இதுவரை காலமும் மலையக சமூகத்தைச் சேர்ந்த பெண்ணோ/ பறங்கியர் இனத்தைச் சேர்ந்த பெண்ணோ பாராளுமன்ற அங்கத்தவராகவில்லை.

இலங்கை ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது துரிதமாக பெண்களின் வாக்குரிமையைப் பெற்ற நாடு. அதுபோல முதலாவது பெண் பிரதமர் இலங்கையர் ஆவார். இப்பெருமைகளைக் கொண்டிருந்தும் பரந்தளவில் மாற்றங்கள் மறைதன்மையானவையாக மாறி வருகின்றன.

இந்நிலைமையை மாற்றியமைக்க என்ன செய்யலாம்.?

### பெண்

சூனியம் சூழ்ந்த இந்த சோக வாழ்விலே
சூரியன் போலவே எழுக மகிளிரே !!

உரிமை கரங்களை ஒன்றாய்ப் பற்றுவீர்
நம் உரிமை கரங்களை ஒன்றாய்ப் பற்றுவீர்
தேசம் மீட்சி காணும்------------
நம் வாழ்வில் விடியல் தோன்றும்

இழந்த சுதந்திரம்----- இழந்த இன்பங்கள்-------
செய்த தியாகம் போதும்-
நாம் செய்த தியாகம் போதும்-
நற்சேவை செய்யவே சேர்ந்து கூடுவோம்
பெண்கள் உலகம் சிறக்க-------- இங்கு,
பேதமைகள் ஒழிக!.

தனித்துவம் தரும் சமூகம் சீர்பெறும்
நாமும் துணிந்து நிமிர்ந்து நடந்தால்
மடமை போக்கியே---------
உயர்வை எய்தவே------
தடைகள் தகர்த்து வாரீர்--------
அறைச் சிறையில் மீண்டு வாழ்வீர்!

அறிவும்---முயற்சியும்----- கொண்ட பெண்களே
கொள்கை வெல்லும் இங்கு-------
நம் கொள்கை வெல்லும் இங்கு-------
நீதி தெய்வமே சாபம் போக்குமே------
மகளிர் வாழ்வு துளிர்க்கும்
மகிழ்ச்சி மண்ணில் பிறக்கும்
அடிமைச் சிலுவையை
உடைத்துக் காட்டியே
சிறகு விரித்துப் பறப்போம்---------
இங்கு புதிய உலகம் படைப்போம்-------!!!
சூனியம் சூழ்ந்த இந்தச் சோக வாழ்விலே
சூரியன் போலவே எழுக மகிளிரே !!

பாடல் - அனார்

www.tamilarangam.net

# புத்தகக் கண்காட்சி 11,12-11-2000



எமது நிறுவன நூலகத்திலுள்ள புத்தகங்கள் ஒலி ஒளிப் பேழைகள் கண்காட்சி கடந்த நவம்பர் 11ம், 12ம் திகதிகளில் அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது இக் கண்காட்சி காலை 9.00 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரையும் பார்வையாளர்களுக்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கண்காட்சியில் பெண்கள் சம்பந்தமான தமிழ், ஆங்கில நூல்கள் பின்வரும் தலைப்புக்களில் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது.

- பெண்ணிய நூல்கள்
- சமூகப் பால்நிலை சம்பந்தமான நூல்
- பெண்களால் எழுதப்பட்ட நூல்கள்
- சமூக விஞ்ஞான நூல்கள்.
- நாவல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள்.
- கவிதைத் தொகுப்புக்கள்
- பருவவெளியீடுகள்
- செய்திமடல்கள்
- சமகாலத் தகவல்களைக் கொண்ட ஆவணங்கள்.
- பெண்கள் தொடர்பான ஆராட்சி ஆவணங்கள்

எமது நிறுவனத்தின் வெளியீடான "பெண்" சஞ்சிகையின் கடந்தகாலப் பதிப்புக்கள் மலிவு விலை விற்பனையும் இடம்பெற்றது. "பெண்களின் குரல்" ஒலிநாடாவும் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. கண்காட்சியில் பின்வரும் வீடியோ காட்சிகள் காண்பிக்கப்பட்டது.

- Rais the Red Lantren (சீனத் திரைப்படம்)
- பச்சை மண்ணு (சுவாமிநாதன் ஆராட்சி நிலையம் - இந்தியா)
- மறுபக்கம் - சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத் தொகுப்பு

இப் புத்தகக் கண்காட்சியை பெண்கள், பாடசாலை மாணவர்கள், சமூக விஞ்ஞானத் துறைகள், பெண்ணியல் ஆய்வுகள் ஆகியவற்றில் ஆராட்சிகளை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர்கள், ஆய்வாளர்கள், வாசகர்கள் அனைவரும் பார்வையிட்டனர். பார்வையாளர்கள் தமது கருத்துக்களை குறிப்பேட்டில் எழுதியதை அவதானிக்கும் பொழுது இந்த நூலகத்தின் பெறுமதியை அறியக்கூடியதாக இருக்கும் என்பதில் மகிழ்ச்சியே.

* இந்தப் புத்தகக் கண்காட்சியும் திரைப்படக் கண்காட்சியும் பெண்பற்றிய சிந்தனையில் ஈடுபாடுடயவர்களுக்கு மட்டுமல்ல சாதாரணமாக தனி மனித ஆளுமையைப் பற்றிய சிந்தனையுடையவர்களுக்கும் ஊக்கமளிப்பதாகும்.

*- வாசுகி -*
*கிழக்குப் பல்கலைக்கழகம்*

* சூரியாப் பெண்கள் அபிவிருத்தி நிலையம் காலத்துக்குக் காலம் மேற்கொள்ளும் பெண்ணிலைவாத விழிப்புணர்வு தொடர்பான நிகழ்வுகளில் இன்று நடைபெறும் நூல் கண்காட்சி முக்கிய இடம் பெறுகின்றது. பெண்கள் சம்பந்தமான சகல நூல்களும் இங்கு காணக்கூடியது குறிப்பிடத்தக்கது. இதுபோன்ற கண்காட்சிகள் மேலும் வரவேற்கத்தக்கது.

*- அன்புமணி*

* பெண்களின் நடைமுறை, வாழ்வியல் உட்பட பல்வேறு பிரச்சினைகளையும் இனங்கண்டு அதற்கான தீர்வுகளுக்காகவும், விடிவுக்காகவும் உழைக்கின்ற சூரியா நிறுவனத்தின் இத்தகைய புத்தகக் கண்காட்சி காலத்தின் தேவையாகும்.

*- ரீ.எல். ஜௌபர்கான்*

* சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினரால் 11ம், 12ம் திகதிகளில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியும், திரைப்படக் கண்காட்சியும், பெண் பற்றிய சிந்தனைவாதிகளுக்கு, பெண் விடுதலை விதிகளுக்கு நல்லதொரு சிறப்புடைய வழிகாட்டியாக அமைந்துள்ளது. இத்தகைய கண்காட்சி எம்மைப்போன்ற மாணவியருக்கு பெரும்பயனுடையதாய் அமையும்.

*- நீ.உ. ஷாதர்ஷினி -*
*மாணவி*





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "சக்தி"

## பெண்கள் குழு

இன்று சமூகம் இயந்திரமயமாக இயங்கிக் கொண்டிருக்கும் வேளையில் மனித மனங்களும் இயந்திரமாகி விட்டது. மனித உணர்வுகள் மரத்துவிட்டன. இதனால் வன்முறைகள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. இந்தவகையில் அனைவரும் இவ் வன்முறையை எதிர்கொள்ளவேண்டி உள்ளது. எனினும் இவ்வன்முறைக்கு அதிகம் உட்படுபவர்களாக பெண்கள் உள்ளனர். சிறுமிகள், யுவதிகள், வயதாகிய பெண்கள் எனும் வயது வித்தியாசமின்றி "பெண்" எனும் காரணத்திற்காய் வன்முறைக்கு இவர்கள் அதிகம் உட்படுகின்றனர். இதனால் பாதிக்கப்படும் பெண்களுக்கு ஆலோசனையும் ஆதரவும் வழங்கவென சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் 1996ம் ஆண்டில் இருந்து சட்ட உதவித் திட்டத்தை செயற்படுத்துகின்றது. அத்துடன் சட்ட உதவி இணைப்பாளருடன் கடந்த ஆறு மாத காலமாக சட்டத்தரணி ஒருவரும் இந்நிலையத்தில் இதற்கென சேவையாற்றி வருகின்றார் நாளாந்த வீட்டுச் சுமைகளின் அழுத்தம் வன்முறைக்குட்படும் பெண்களை மேலும் தனிமைப்படுத்துவதாக அமைகின்றது. இவ்வாறு தமது தனிப்பட்ட பிரச்சினைகளைப் பகிர்ந்துகொள்ளவும், அவர்களது உரிமை சார்ந்த விடயங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் "சக்தி" எனும் பெண்கள் 1998ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.



இக்குழுவில் கணவன்மாரால் கைவிடப்பட்ட பெண்களும், பாலியல் வன்முறைக் குள்ளாக்கப்பட்ட பெண்களும்,பாலியலதுஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சிறுமியரின் தாய்மாரும் அடங்குவர்.



இவர்களது மாதாந்தக் கூட்டத்தில் தங்களது நாளாந்த வாழ்கை நிலை பற்றி கலந்துரையாடுவதுடன் திருமணச் சட்டம், விவாகரத்துச் சட்டம், சிறுவர் உரிமை, பெண்களது உரிமை பிரச்சினைகள், வழக்குகள் இழுபறியான நிலை போன்ற விடையங்களும் கலந்துரையாடப்படும்.

தற்போது இவர்கள், தங்கள் கிராமங்களில் பிரச்சினைக்குட்படும் பெண்களை சூரியாவில் அறிமுகப்படுத்தி அவர்களுக்கு சட்ட உதவி பெற்றுக் கொடுக்கின்றனர். அத்துடன் சூரியாவின் ஏனைய நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றுவதுடன் தங்களால் முடிந்த பங்களிப்புக்களையும் செய்கின்றனர்.

முக்கியமாக இக்குழுவினர் தமது சேமிப்பின் மூலம் சுய தொழிலில் ஈடுபடும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.இதற்கென வங்கிகளில் உள்ள கடன்திட்டங்களை அறிந்துகொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். அத்துடன்

* கிராமத்தில் விழிப்புணர்வு கூட்டங்களை ஒழுங்குசெய்தல்
* சுய தொழிலில் ஈடுபட்டு வாழ்கை நிலையை உயர்த்துதல்
* பெண்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ளக்கூடிய வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
* பெண்களுக்கெதிரான வன்முறையைக் குறைக்கக்கூடிய வகையில் உதவிக் குழுக்கள் அமைத்து செயற்படுத்தல் போன்ற விடையங்களை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கான நோக்கத்துடன் இக் குழுவினர் செயற்படுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net




# கலாச்சாரக் குழுவின் கண்காட்சி



"பெண்களின் ஆற்றல்களை வெளிப்படுத்தும் முகமாக சூரியா கலாசாரக் குழுவினரால் டிசம்பர் 15,16ம் திகதிகளில் மட்டக்களப்பு சாள்ஸ் மண்டபத்தில் கண்காட்சி ஒன்று நடாத்தப்பட்டது. இக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வாக சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட சூரியாவின் ஆறு சங்கங்களின் தலைவர்கள் கௌரவிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து விளக்கேற்றல் வைபவமும், சூரியா கலாசாரக் குழுவினரின் பாடல்களும் இடம் பெற்றன. பெண்கள் அழகுசாதனப் பொருட்களையும், சமையல் பொருட்களையும், அலங்காரப் பொருட்களையும். பாவிப்பவர்கள் எனும் சமூகக்கண்ணோட்டத்தை மாற்றியமைக்கும் வண்ணம் பெண்களால் உருவாக்கப்பட்ட வினைத்திறன் மிக்க பல பொருட்கள் இங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. பாடசாலைப் பைகள், அழகிய வாழ்த்து மடல்கள், ஓவிய அட்டைகள், பனை ஓலைப் பொருட்கள் பஞ்சினால் உருவாக்கப்பட்ட பொம்மைகள், தலைமுடி அலங்கரிப்புக்கள், மணி மாலைகள், குழந்தைகளின் சட்டைகள், தொப்பிகள், கழிவுப் பொருட்களினால் செய்யப்பட்ட பூச்சாடிகள், சித்திரங்கள், பதாதைகள், துணிகளில் வரையப்பட்ட ஓவியங்கள், சூரியா நிலைய வெளியீடுகள், அப்பியாசக் கொப்பிகள், போன்ற பல பொருட்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் விற்பனையும் செய்யப்பட்டது.







## துணிவுகொள்

பெண்ணே
நிலவை
தொட்டவளும் நீதான்
உலகை
ஆள்பவளும் நீதான்
என
நிருபித்துக் காட்டியும்
ஏன்
விட்டில் பூச்சியாய்
மடிகின்றாய்

உன்னை
நிலவென்பார்
ஏன் தெரியுமா?
நிலவு
என்பதால்

இவர்களின்
பகட்டான பேச்சில்
மயங்கியது போதும்

எழுந்திரு
துணிவு கொண்டு
எழுந்திரு பெண்ணே?
நம் சுதந்திரத்தை
நாமே பெற?
எழுந்திரு?

**கி. கலைமகள்**
**நாவற்குடா உழைக்கும்**
**மாதர் சங்கம்.**

www.tamilarangam.net

# பெண்கள் குழுக்களின் ஒன்றுகூடல்



ஏட்டுக்கல்வி அனுபவக்கல்வி இதில் அனேக பெண்களுக்குக் கிடைப்பது ஏட்டுக் கல்வி மட்டுமே பூரன அறிவைப் பெற வேண்டுமானால், வாழ்க்கை என்னும் நீரோட்டத்தில் எதிர் நீச்சல் போட்டு நம் இலக்கை அடைய வேணடுமானால் ஏட்டுக் கல்வியுடன் அனுபவக் கல்வியையும் நாம் பெற்றிருத்தல் வேண்டும். அனுபவக் கல்வி என்பது வெளி உலகம் நமக்குத் தருவது. சமுதாய நெளிவு சுழிவுகள், பள்ளம் மேடுகள் கரடும் முரடுமான பயனங்கள் எம்மை சிந்திக்க வைக்கின்றது, போராட வைக்கின்றது, தீர்மானம் எடுக்க வைக்கின்றது, வாழ்வின் நிறைவை, நிம்மதியை, வெற்றியை எமக்கெனத் தருகின்றது.

பெண்கள் ஏட்டுக் கல்வி முடித்ததும் அடுத்த கட்டமாக திருமணத்தை எதிர்கொள்கின்றார்கள். இந்த நிலைமை இன்று நகரங்களில் குறைந்து வருவதாக இருந்தாலும் கிராமப் பகுதிகளில் இன்றுவரை இதே நிலையே நீடித்து வருகின்றது. திருமணம், தொடர்ந்து வரும் குழந்தைகள், உறவுகள்,



வீட்டுச் சுமைகள்...... கிரீடம் சுமக்கும் அடிமைகளாய் "இல்லத்தரசி" என்னும் நாமத்துடன் நான்கு சுவரைச் சுற்றிவந்து நாட்கள் கரைய இவர்கள் வாழ்வும் முடிகின்றது. இவர்களது ஏக்கம், ஆசை, சிந்தனை, திறமை எல்லாம் இவர்களுடனேயே புதையுண்டு போகின்றது. இப்படியான பெண்களை சங்கங்களில் இணைத்து அவர்கள் உணர்வுகளையும் திறமைகளையும் வெளிக்கொணர்ந்து அவர்கள் உரிமைகளை, அவர்களே உணரும் செயற்பாட்டை கிராமங்களில் சூரியாப் பெண்கள் அபிவிருத்தி நிலையம் நடைமுறைப்படுத்தி வருகின்றது. இதற்கென கிராமங்களில் பெண்கள் குழுக்களை அமைத்துள்ளது. இவ்வாறு அமைக்கப்பட்ட பெண்கள் குழுக்கள், தங்கள் திறமைகளை வெளிக்கொண்டு வரவும் பரஸ்பரம் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளவும் ஆண்டுக் கொருமுறை ஒன்றுகூடல் நிகழ்வுகளை நடத்தி வருகின்றது. இந்த வகையில் 21.10.2000 அன்று நாவற்குடாவில் இவ் ஒன்றுகூடலை நடத்தியது இதில் கலந்துகொண்ட சங்கங்கள் குமாரபுரம் உழைக்கும் மாதர் சங்கம், பூநொச்சிமுனை பெண்கள் சங்கம், முறக்கொட்டாஞ்சேனை பெண்கள் முன்னேற்றச் சங்கம், நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம், இருதயபுரப் பெண்கள் சங்கம், ஆரையம்பதி காங்கேயனோடைசங்கமி சங்கம். சங்க வளர்ச்சிக்காக அக்கறையுடனும் ஆர்வத்துடனும் தொடர்ந்து செயற்பட்டுவரும் மூன்று பெண்கள் ஏனைய உறுப்பினர்களால் கௌரவிக்கப்பட்ட நிகழ்ச்சி முதல் நிகழ்வாக இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான தாரா



ஓட்டம், மா ஊதிக்காசெடுத்தல், மரக்கறி வாங்குதல் போன்ற விளையாட்டுக்களும் சங்கப் பெண்களுக்கான அலங்காரப் போட்டி, பாட்டுக் கட்டும் போட்டி போன்ற நிகழ்வுகளும், ஆண்களுக்கான ஊசியில் நூல் கோர்த்துத் தைக்கும் போட்டியும் இடம்பெற்றது. தொடர்ந்து "இது எமது படைப்பு" எனும் கலாசாரக் குழுவினரின் வீதி நாடகம் இடம் பெற்றது. அடக்கப்படும் பெண்களின் உணர்வுகளும், திறமைகளும் எவ்வாறு வெளிவருகின்றது எனும் கருத்தை இந் நாடகம் பார்வையாளர்களிடையே கொண்டு செல்கின்றது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூரியா நூலக விபரன ஒளிப்பதிவு நாடாக்கள்

1. கத்தரியின் வீட்டில்
2. சர்வதேச பெண்கள் தினம் 1998
3. பயிற்சியாளர்களுக்கான பயிற்சி
4. காதலர்கள் பயணம்
5. நாளாந்த வாழ்க்கையில் விஞ்ஞானம் (குறைந்த செலவில் வீட்டுத்தொழிநுட்பவியல்)
6. கைப்பணிப் பொருட்கள் கண்காட்சியும் கலாசார நிகழ்ச்சிகளும்.
7. நீதியை நாடி (UNICEF) குழந்தையின் உடல், உள, ஆரோக்கியமும் துஷ்பிரியோகத்தைத் தடுத்தலும்
8. நாடகப் பயிற்சி அளிக்கை-மங்கை -மட்டுநகர் கண்ணகைகள்-பாரமுறி விளையாட்டு -நிஷப்த இரைச்சல்
9. சுடர்களை அணைக்கும் இடர்கள் -சீதனம் சிதைக்கப்பட ஒரு பாரம்பரியம் -விபச்சாரிகள் -வேஜின் ரெஸ்ரிஸ் (கன்னித்தன்மை பரிசோதனை) (ஆங்கிலம்) -பாலியல் வன்முறை
10. மௌன ஓலங்கள் (சுவாதிப் பெண்கள் இயக்கம்)
11. வாருங்கள் தோழியரே வையகத்தை வெற்றிகொள்ள
12. மங்கையர் பற்றிய மனப்பதிவுகள் (பெண்கள் தொடர்புசாதனங்களில் எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றார்கள்)
13. மறுக்கப்பட்ட உரிமைகள்
14. பெண்ணின் ஒருநாள் பொழுது.
15. உயிர்கொல்லி நோய்கள்-6 -ரிவிஎ-பயிற்சி -எயிட்ஸ் -காசநோய்
16. பெண்களுடைய இடம்
17. காட்டுன் சித்திரம்
18. எ வுமன் பீளேஸ் சோட் ஸ்டோறிஸ் வித் எலிசபெத டெகடெஸ்வெல் (ஆங்கிலம்)
19. த லவ்வஸ ஒப் ரவல் (ஆங்கிலம்)
20. -தடைகளுக்கு அப்பால் -இடையூறுகள் -ஊதியத்திற்கான கூலி
21. த பாண்டர் சிப்ஸ் (ஆங்கிலம்)
22. இலாகவமான விரல்கள்(ஸிம்பிள் பிங்கஸ) (ஆங்கிலம்)
23. உடமை (பொஸஸ்ட்) (ஆங்கிலம்)
24. நீதியை நாடி
25. பலம்வாய்ந்த ஒரு காலம் (எ ரைம் போ ஸ்ரென்த்) (ஆங்கிலம்)
26. பெண்ணாக இல்லாவிட்டால்
27. வளைந்த பாதையூடாக எலோங் த வைண்டிஸ் றோட்) (ஆங்கிலம்)
28. சமூக நாடகப் பயிற்சிப் பட்டறை
29. த பரடொக்ஸ் (ஆங்கிலம்)
30. மீற்றிங் சட்டீலன்ஸ் (ஆங்கிலம்)
31. மறுபக்கம்
32. மங்கையராய்ப் பிறப்பதற்கே (நாடகம்)
33. சர்வதேச மகளிர் தினம் – மார்ச் 08 – 1999
34. பீஜிஸ்-95
35. நிராகரிக்க முடியாதபடி
36. சோட் பிசிம்
37. பவ்வ மண்ணு
38. குலவை – I
39. குலவை – II
40. சர்வதேச பெண்கள் தினம்-1995 மார்ச் 08
41. சிதம்பரம்
42. அவதாரம்
43. மதர் இந்தியா
44. கருத்தம்மா
45. செம்மீன்
46. பொன்மணி
47. அவ்வைத் தமிழ் (நாடகம்)
48. நாடகங்களின் தொகுப்பு-சூரியாவின் செயற்பாடுகள்
49. கிரகணம்
50. பூச்சு மருந்தின் விளைவும் விபரீதமும்
51. எ பிலிம் இன் த தியேட்டர் படல் சேகர் (ஆங்கிலம்)
52. சர்வதேச பெண்கள் தினம்-2000
53. பொறக்கொட்டான் சேனை கிராமியப் பெண்களின் ஒன்றுகூடல்-1999
54. பெண்களுக்கெதிரான வன்முறை வாரம்-1999

இவ் வீடியோத் திரைப்படங்களை பார்வையிட விரும்புவோர் முன்கூட்டியே உரிய திரைப்படத்திற்கான அறிவித்தல் கொடுத்து சனி, ஞாயிறு தினங்களில் படங்களைப் பார்வையிடலாம்.

## யதார்த்தம் எது

மானிடப் பிரக்ஞை உலகில்
பல்லாயிரம் ஆண்டுகளாக
ஏகப்பட்ட முரன்பாடுகள் - கொண்ட
மதங்களும் சமுதாயமும்
பெண்களின் அடையாள ஆளுமை
சுய இருப்பு இல்லை
தூய இருப்பு என
பெண்களுள் திணித்து வைத்திருப்பது
அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு - இது

ஆருக்குத் தேவை?
ஏற்படுத்தியவர்களுக்கா? எங்களுக்கா?
அவர்கள் வேண்டுமானால்
அணிந்து வாழட்டும்
எங்களுக்கு நேரமில்லை
அவர்கள் ஏற்படுத்திய
தூய இருப்புப் பற்றி
நாங்கள் அலட்டிக்கொள்வதில்லை
பழமைக் கட்டுக்குள்ளிருந்து

விடுபட்டு நிற்பது........
எங்களின் சிந்தனை வளர்ச்சி
மாத்திரம் இல்லை
அவர்களின் செய்கையிலும்
மாற்றம் வேண்டும் என்பதற்காகத்தான்
யதார்த்தம் எது?
மாறாது நிலை பெறும்
சொற்களா?
பெண்களின் வாழ்தலா?

-தில்லை-


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "தமிழ் இனி" 2000

## உலகத் தமிழ் இலக்கிய அரங்கு அனுபவம்

புு. விஜிகலா

இவ்வருடம் செப்டம்பர் மாதம் 1,2,3,ம் திகதிகளில் இந்தியாவில் தமிழ்நாட்டில் "தமிழ் இனி 2000" உலகத் தமிழ் இலக்கிய மகாநாடு இடம்பெற்றது. இம் மகாநாட்டில் உலகெங்கும் பரந்து வாழும் பல தமிழ் இலக்கிய வாதிகள் கலந்து கொண்டார்கள் அம்மகாநாட்டில் சூரியா நிலையத்தைச் சேர்ந்த அலுவலக உத்தியோகத்தர், கலாசாரக்குழு அங்கத்தவர், ஆலோசனைக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

அம் மகாநாடு பற்றிய விளக்கம் பல பத்திரிகைகளிலும் எமது வெளியீடானது பெண் சஞ்சிகை 5:2 இலும் வெளி வந்துள்ளது. (தமிழ் இனி மகாநாட்டில் பெண்கள்)

எனினும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் வாழும் பெண்ணுக்கு தன் சிறகுகளை சுதந்திரமாய் விரித்து புதிய ஓர் அனுபவத்தினை காணும் போது அவள் அடையும் சந்தோசத்தையும் அவளது உணர் வினையும் அவளது கோணத்தில் இருந்து நாமும் சந்திக்கும் முகமாக சூ.க.குழு சகோதரி விஜிகலாவின் "தமிழ் இனி 2000" மகாநாட்டின் அனுபவத்தினை தருகின்றோம்.

"செப்டம்பர் 2000 1ம், 2ம், 3ம் திகதிகளில் தமிழ் நாட்டில் நடைபெற்ற உலகத் தமிழ் இலக்கிய அரங்கில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்தது. இந்நிகழ்வு என் வாழ்க்கையில் மறக்கமுடியாத ஒன்று தமிழ் நாட்டிற்குச் செல்ல வேண்டும் என்று சிறுவயதில் இருந்து என் அடிமனதில் ஒரு ஆசை. அது நிறைவேறும் சந்தர்ப்பம் கிடைக்கும் என்று நான் கனவில் கூட நினைக்கவில்லை. ஆனால் தமிழ்நாட்டிற்குச் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்ததோடு உலகப் புகழ் பெற்ற எழுத்தாளர்களை நேரேகாணும் சந்தர்ப்பமும் கிடைத்தது. "தமிழ் இனி" மகாநாட்டில் கலந்து கொண்டதில் எனக்கு நிறைய அனுபவங்கள் கிடைத்துள்ளது எனக்குள் ஒளிந்திருந்த திறமையை இச் சந்தர்ப்பத்தில்தான் எனக்கே உணரமுடிந்தது. இப்படியொரு அரிய சந்தர்ப்பத்தைப் பெற்றுத் தந்ததற்கு நான் பலருக்கு நன்றி கூறவேண்டும். எனக்கு பல திறமையைக் கொடுத்துப் படைத்த கடவுளுக்கு என் முதல் நன்றி. என்னுடைய திறமையை வெளிப் படுத்த நினைத்த வேளையில் என் ஆசைக்குத் தடைவிதிக்காமல் என் அறிவில் வளரவிட்ட என் பெற் றோருக்கு அடுத்த நன்றி. அதிலும் என் தாய்தான் நான் வெற்றி பெறுவதற்குக் காரணமாக இருக் கின்றார். என் திறமையை இனங்கண்டு என்னை மதித்து இப்படியொரு பெரிய சந்தர்ப்ப த்தினைக் கொடுத்த சூரியா பெண்கள் அபிவிருத்திநிலை யத்திற்கு எனது நன்றிகள் "தமிழ் இனி" மகாநாட்டில் கலந்துகொண்ட சந்தர்ப்பத்தில் எனக்கு கிடைத்த அனுபவங்கள் அனைத்தும் என் வாழ்கையிலே முதல் முதலாகக் கிடைத்த புது அனுபவங்கள் இவை என் திறமையை மேலும் வளர்க்க வித்திட்டதுமான அனுபவங்கள்தான் எத்தனையோ படித்த அறிவான வர்களுக்கு மத்தியில் நான் என்ன செய்யப் போகின்றேன் என்று பயமாக இருந்தது. இருந்தாலும் எல்லாவற்றையும் சமாளிப்பேன் என்ற தைரியமும் எனக்குள் ஒழிந்திருந்தது. உலகப்புகழ்பெற்ற எழுத்தாளர்களை புத்தகங்களிலும், பலர் சொல்லியும் கேள்விப்பட்ட நான் அவர்களை நேரே சந்திக்கும் போதும், அவர்கள் சிலபேருடன் கதைத்த போதும் அளவற்ற மகிழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில் அவர்களுடைய முழுமையான கட்டுரைகளை ஒருமனதுடன் இருந்து கேட்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. இதற்குக் காரணம் இதனுடன் சேர்த்து புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நடந்தது தான். கட்டுரை வாசிப்பைப் பார்த்த அனுபவத்தைவிட புத்தகக் கண் காட்சியில் கிடைத்த அனுபவங்கள் தான் அதிகம் சிறிய வயதிலிருந்து ஐம்பது வயது தாண்டியவர்களும் அளவில்லாமல் புத்தகங்கள் வாங்கியதைக் கண்டு ஆச்சரிய மடைந்தேன் அங்கு வந்த மக்கள் கூட்டத்தினரைப் பார்த்ததும், எங்கள் ஊரில் பெரியகோவில திரு விழாக்களில் திரிவதுபோல் கற்பனை வந்தது. இந்தியாவிற்குச் சென்று எனக்குப் பாடும் சந்தர்ப்பம் கிடைத் ததையிட்டு பெரும் மகிழ்ச்சியடை கின்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




அங்கு நின்று பாடும்போது என்னுடன் சேர்ந்து அத்தனை கவிஞர்களும், எழுத்தாளர்களும் பாடினார்கள் என்பதை நினைக்கும் போது என் மகிழ்ச்சிக்கு அளவே யில்லை. அங்கு நடைபெற்ற சில கலைநிகழ்ச்சிகளையும் பார்க்கக் கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. எங்கள் நாட்டில் நடைபெறும் நாடகங் களுக்கும், அங்கு நடைபெறும் நாடகங்களுக்கும் நிறைய வித்தி யாசங்கள் இருப்பதை உணர்ந்தேன். நான் சந்தோஷம் அனுபவித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் என் தோழிகளின் நினைவு வந்தது. என்னைப்போல் அவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவேண்டும் என்று நினைத்துக்கொண்டேன். இந்த "தமிழ் இனி" மகாநாட்டில் கலந்துகொண்டதற்குப் பின்பு நிறைய எழுத்தாளர்களைப் பார்த்ததற்குப் பின்பு எனக்குள்ளே சில கேள்விகள் எழுந்தது. இவர்களும் தங்கள் முயற்சியால் தானே இன்று பெயர்பெற்ற எழுத்தாளர்களாக இருக்கின்றார்கள். எங்களுக்குள் எத்தனையோ அனுபவங்கள் இருக்கின்றது. அவற்றை யெல்லாம் கட்டுரை, கவிதை, கதைவடிவிலும் எழுதி சிறந்த ஒரு எழுத்தாளராக வரலாம் என்று அறிந்து கொண்டேன். அதேபோல் எனக்குக் கிடைத்த அனுபவத்தினை மற்ற வர்களுக்கும் எடுத்துக் கூறி அவர் களின் வளர்ச்சிக்கும் என்னால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும் என எண்ணுகின்றேன்"

www.tamilarangam.net

# பெண்களே! நாம் முயன்றால் விடுபடலாம்

சாதாரணமாகப் பெண்கள் மிக இலகுவில் சோகத்திற்கு ஆளாவதை நாம் காண்கின்றோம். குடும்பத்தில், அயலவரில், சூழலில் துன்பம் நேரிடும் போது பெண்களும் இவ்வாறான சோக நிலைக்கு இலகுவில் உள்ளாகி விடுகின்றனர். இதன் வெளிப்பாடாக பின்வருவனவற்றை அவதானிக்கலாம்.

| | |
|---|---|
| கண்ணீர்விடல் | தலையிடி |
| பசியின்மை | நெஞ்சுநோ |
| யோசனை | பதட்டம். |

இதற்குப் பல காரணங்கள் உண்டு. பெண்கள் மிகவும் மென்மையான மனம் கொண்டவர்கள். மற்றவர்களை உணர்வுபூர்வமாக விளங்கிக்கொள்ளும் பக்குவம் உடையவர்கள். இதனால் தாமும் இலகுவில் உணர்வுகளுக்கு உள்ளாகி அதனை வெளிக்காட்டுபவர்கள்.

அத்துடன் மற்றவர்களில் அக்கறை, அவதானம், செவிமடுத்தல் போன்ற நல்ல பண்புகள் இவர்களிடம் உண்டு. மற்றொன்று இவர்களது உடல் அமைப்பு. இதனால் எளிதில் மன அழுத்தத்திற்கு உள்ளாகி விடுகின்றார்கள். சாதாராண வாழ்வில் துன்பம், இன்பம் இரண்டும் மாறிமாறி வருவது இயல்பு. இன்பத்தை எதிர்நோக்கும் பக்குவம் துன்பத்தில் இல்லை.இதனால் துன்பத்தைக் கண்டு இடிந்துபோய் உட்கார்ந்து இருப்பது பெண்களின் இயல்பாக மாறி விட்டது.

துன்பத்தை நின்று, கவனித்து, ஆராய்ந்து விடுபட்டுச் செல்ல முயற்சிப்போமானால் அல்லது துன்பத்தினை எவ்வாறு கையாள்வது என அறிந்துகொள்வோமானால் அதுதான் எமது வெற்றியாகும்.

## இதோ! அதற்கான சில வழிமுறைகள்

எம்மால் முடியும் என்ற மனத்தைரியத்துடன் துன்பத்தினை ஏற்றுக்கொள்ளல்.
ஏன், எப்படி, எனது பங்கு என்ன என துன்பத்தை முழுமையாக விளங்கிக்கொள்ளல்.
யாருடன் முன்னர் பகிர்ந்து நமது நம்பிக்கைக்கு உரியவர் என அறிந்து கொண்டோமோ அவருடன் பகிர்ந்து கொள்ளல்.
தெரிந்த வழிகளையே பாராமல் புது வழிகளையும் கண்டு அதிலிருந்து விடுபடும் வழிமுறைகளை அறிந்து கொள்ளல்.
ஆலோசனை தேவைப்படின் உரியவர்களை அணுகல்.
இப்படியான செயல்முறைகளில் ஈடுபடுவதன் மூலம் மன அழுத்தம் அல்லது மனப்பாரம் குறைவதுடன் அப் பிரச்சினைக்கான வழிவகைகளும் கிடைக்கின்றது.
மனமும், உடலும் ஒன்றோடொன்று இணைந்தவை. மனதில் ஏற்படுகின்ற உணர்சி மாற்றங்கள் உடலையும் பாதிக்கின்றன. அதேபோல் பெண்களுக்கே என ஏற்படும்
உடல்நிலை மாற்றங்களும் உணர்வுகளை மாற்றுகின்றன. எனவே மனத் துன்பத்திற்கு நம்முடன் வாழ்பவர்கள்தான் காரணம் என்று எண்ணாமல் உடல் மாற்றத்தையும் புரிந்து கொள்ளுதலே துன்பத்தைக் குறைக்கும் என ஆராட்சியாளர்கள் கூறுகின்றார்கள். எந்த சமையத்தில் துன்பப்படுவது அல்லது துக்கம் கொள்வது அதிகம் என அவதானித்தால் மனத்துன்பத்திற்கும் மாதவிடாய்க்கும் சம்பந்தமுண்டா என்பதனைத் தெரிந்துகொள்ளலாம். இந்நிலை சுய கட்டுப்பாட்டுக்கு மேல் சென்றால் இதற்காக மருத்துவ உதவியையும் நாடலாம்.
எனவே மனமும், உடலும் வேறு வேறல்ல மனதைக் குணப்படுத்தாமல் உடலைக் குணப்படுத்துவது நல்லதல்ல. எனக் கிரேக்கத் தத்துவஞானி பிளேட்டோ கூறுகின்றார்.
ஆகவே பெண்களே! நாமும் எமது கவலைகளை எப்படிக் கையாள்வது என விளங்கி, உணர்ந்து அடிகளை எடுத்து வைப்போமாக.

-க.வன்னிரமா-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிராமியக் குழுக்களின் காலாண்டுக் கூட்டம்

முறக்கொட்டான்சேனை பெண்கள் முன்னேற்றச் சங்கம், நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம் பூநொச்சிமுனை பெண்கள் சங்கம், குமாரபுரப் பெண்கள் சங்கம் ஆகிய சூரியாவின் கிராமியக் குழுக்கள் 07.06.2000 அன்று நாவற்குடா மாதர் முன்னேற்றச் சங்கக் கட்டிடத்தில் தங்கள் கடந்த காலச் செயற்பாடுகள் பற்றிய மீளாய்வை நோக்கமாகக் கொண்டு காலாண்டுக் கூட்டத்தை நடத்தினர். இவர்கள், தங்களது சங்கத்தின் கடந்தகால வளர்ச்சி, தற்போதைய செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள் போன்றவற்றைக் கலந்துரையாடியதுடன் தங்கள் நோக்கத்தைச் சென்றடைய தாங்கள் எதிர்நோக்கிய பல இடையூறுகளையும் இனங்கண்டனர்.

அன்றைய கூட்டத்திற்கு சமூகமளித்திருந்த தேசிய இளைஞர் சேவைகள் உத்தியோகத்தரும், சூரியா நிர்வாக சபை உறுப்பினருமான வண்ணிமா, சூரியா அபிவிருத்தி நிலைய இணைப்பாளர்கள், கலா சாரக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளைக் கூறியதுடன் சங்க அங்கத்தவர்களும் பரஸ்பரம் ஆலோசனைகளையும், கருத்துக்களையும் பகிர்ந்துகொண்டனர்.

அத்துடன் இவ்வருடம் சங்கமாக இயங்க விருக்கும் காங்கேய நோடை - ஆரையம்பதி மகளிர் குழுக்களில் இருந்து இரு சகோதரிகள் கலந்து கொண்டதுடன், தாங்கள் அமைக்க இருக்கும் சங்கத்திற்கு இந் நிகழ்வு எவ்வகையில் உதவும் என தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தனர்

## நாவற்குடா உழைக்கும் மாதர் சங்கம்



### கடந்தகால வளர்ச்சிகள், செயற்பாடுகள்

* வாசிப்புத் திட்டத்தை செயற்படுத்தியமை
* கிராமக் கூட்டங்களுக்கும், கிராம முன்னேற்ற நடவடிக்கைகளுக்கும், ஓர் நிரந்தரக் கட்டிடம் எடுத்தமை.
* பாதிக்கப்பட்டவர்களுக்கும் பாதிக்கப்பட்டவர்களின் உறவினருக்கும், பொது மக்களுக்கும் பண உதவி பொருள் உதவிகள்.
* பொதுச்சிரமதான வேலைகளில் ஈடுபடல்.
* சேமிப்பில் இருந்து சுழற்சிக் கடன் முறையில் கடன் கொடுத்து சுய தொழில் வாய்ப்பில் ஈடுபடல், சேமிப்பு அதிகரித்தல், அங்கத்தவர்களின் வருமானம் வாழ்க்கைத்தரம் உயர்வு.
* பலவகைப்பட்ட விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறைகளில் கலந்துகொண்டமை இதன்மூலம் வெளித்தொடர்புகள் கிடைத்தமை, நம்பிக்கை, சுயஆளுமை, விருத்தி ஒற்றுமை, தலைமைத்துவ பண்புகள் அதிகரிப்பு.

### கடந்த காலங்களில் எதிர்நோக்கிய இடையூறுகள்

* ஆண்களின் ஒத்துழைப்புக் குறைவு.
* அங்கத்தவர்களின் வரவு குறைவு இதற்கான காரணம் சங்கங்களின் நோக்கத்தை விளங்கிக் கொள்ளும் முன், விலகியமை, பெண்கள் பற்றிய தவறான மனப் பதிவுகள்

### எதிர்பார்ப்புக்களும் எதிர்காலத் திட்டமும்.

* வாசிகசாலை அமைத்தல்.
* வீதிப் புனரமைப்பு
* சிறுவர் பூங்கா
* உப தபாற் கந்தோர்
* சுயதொழில் பயிற்சிகள்.
* கிராம மலசலகூடங்கள் திருத்தம்.
* வாசிப்பைப் பலப்படுத்தல்.
* கிராம மக்களுடைய விழிப்புணர்வு.

## பூநொச்சிமுனை பெண்கள் சங்கம்



www.tamilarangam.net

**கடந்தகால வளர்சிகளும், செயற்பாடுகளும்.**

* மின்சாரம் பெறும் பொருட்டு உரிய நிறுவனங் களுடன் தொடர்பு கொண்டது
* கிராமத்திற்கு வெள்ள நிவாரணம் பெற்றுக் கொண்டது
* பலவகைப்பட்ட விழிப்புணர்வு பயிற்சிப் பட்டறைகளில் கலந்து கொண்டது
சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினருடன் இணைந்து பல நிகழ்வுகளில் கலந்து கொண்டமை.
* போட்டிகள், கலை நிகழ்வுகளில் கலந்து திறமைகளை வெளிக்கொணர்ந்ததுடன் சுயதிறமை களை வளர்த்துக் கொண்டது.

**இடையூறுகள்**

* இளம் அங்கத்தவர் வரவு குறைவு, காரணம் கலாசார இறுக்கம்.

**எதிர்பார்ப்புகளும் எதிர்காலத் திட்டமும்.**

* தமிழ்ச் சகோதரிகளுடன் இணைந்து சங்க அங்கத்தவர்களை அதிகரித்தலும், புதுப்பித்தலும்.
* கலாசார இறுக்கங்களினால் அவதிப்படும் பெண்களின் விழிப்புணர்வை அதிகரித்தல், சுதந்திரம் மிக்கவர்களாக ஆக்குதல்
* கிராமத்தை அபிவிருத்தி செய்தல், வடிகால், மலசலகூட, குடிநீர் வசதிகளை பெற்றுக்கொடுத்தல்.
* ஆண்களின் தவறான மனப்பதிவுகளை மாற்றுதல்.

* ஆண்கள் பெண்களைக் கூட்டத்திற்கு விடுவதில்லை. ஆண்களின் கேலிப் பேச்சு.

## குமாரபுரப் பெண்கள் சங்கம்

**கடந்தகால வளர்சிகளும், செயற்பாடுகளும்.**

* வீதியமைத்தது.
* வீட்டுத்திட்டம் செயற்படுத்தியமை.
* வாசிகசாலைக்கு தளபாடங்கள் பெற்றுக் கொண்டமை.
* பாலர் பாடசாலை, குடிநீர் வசதி ஏற்படுத்தியமை
* சேமிப்பு அதிகரிப்பு
* சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினருடன் இணைந்து பல நிகழ்வுகளில் கலந்து கொண்டமை.
* போட்டிகள்,கலை நிகழ்வுகளில் கலந்து திறமைகளை வெளிக்கொணர்ந்ததுடன்-சுய திறமைகளை வளர்த்துக்கொண்டது.

**எதிர்பார்ப்புகளும் எதிர்காலத் திட்டமும்.**

* பொதுமக்கள், பெண்கள் இடையே விழிப்புணர்வு
* கிராம அபிவிருத்தி.
* கிராம அபிவிருத்திகளுக்கு நிரந்தரக் கட்டிடம்.
* கடனுதவிகள் பெற்று சுயதொழில் வாய்ப்பு பெக்களில் ஈடுபடல்.
* மலசலகூட வசதிகள் பெறல்
* போக்குவரத்து வசதிகளைச் செய்தல்
* வாசிப்புப் பழக்கத்தை அதிகரித்தல்.

**இடையூறுகள்**

* அங்கத்தவர் வரவு குறைவு.
* ஆண்களின் கட்டுப்பாடுகள் பெண்களை செயற்பட வைப்பதில்லை.

## முறக்கொட்டாஞ்சேனை பெண்கள் சங்கம்.

**கடந்தகால வளர்சிகளும், செயற்பாடுகளும்.**

* சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தினருடன் இணைந்து பல நிகழ்வுகளில் கலந்து கொண்டமை.
* போட்டிகள்,கலை நிகழ்வுகளில் கலந்து திறமைகளை வெளிக்கொணர்தலும்-திறமைகளை வளர்த்துக் கொண்டலும்.
* அங்கத்தவர்கள் இடையே முயற்சியும் ஆர்வமும் உள்ளது.

**இடையூறுகள்**

* தற்போதய யுத்த சூழலால் கூட்டங்கள் கூடுவதும் சங்கச் செயற்பாடுகளை செயற்படுத்துவதிலும் சிரமம்.
* இளம் அங்கத்தவர் மட்டும் இருப்பதால் சமூக, வீட்டுக் கட்டுப்பாடுகள் அதிகம்.



**எதிர்பார்ப்புகளும் எதிர்காலத் திட்டமும்.**


சங்க நடவடிக்கைகளுக்கும் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கும் நிரந்தர இடம் பெறல்.
மின்சார வசதி பெறல்.
வங்கிக் கணக்கு ஆரம்பித்தல்.
சங்கத்தைப் பதிவு செய்தல்.
சுயதொழில் வாய்ப்பில் ஈடுபடல்.
சேமிப்பை அதிகரித்தல்.
பாடசாலை "கன்டின்" போடல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "உயிர்வெளி" அறிமுகம்



காதல் .........
இணைந்த போது, காதல் உறவு இனிமையானது
பிரிந்த போது காதல் நினைவு இனிமையானது
யுகங்கள் மாறும் - கணங்கள் மாறும்
நிலை மாறாது நிலைத்து வாழும் காதல்
மெல்லிய அழகிய காதல் உணர்வு
யாருக்குச் சொந்தம்...................?
உறவை இணைக்கும் பாலம் காதல்
காதல் பொதுமையானது
படைக்கப்பட்ட உயிர்கள் அத்தனைக்கும்
பொதுமையானது
எமது சமுதாயக் கட்டமைப்பு, கட்டி வளர்த்த அச்சம்
மடம், நாணம், பயிர்ப்பு பெண்ணின் அழகிய உணர்வை
மூடி மறைத்து

ஆண் காதலிப்பவனாகவும்
பெண் காதலிக்கப் படுபவளாகவும்..... மாறச்
சொல்கிறது.
ஆணின் காதல், கவிதையாக ஏட்டில் பொறிக்கப்பட
பெண்ணின் காதல், காலால் இடும் கோலங்களாகவும்.
அவளது தினக்குறிப்புகளிலும், புத்தக பின்
மட்டைகளிலும் பொறிக்கப்பட்டு மறைந்து விடுகின்றது.

உண்மையை உண்மையாக இனங்கண்டு பெண்களின் உணர்வுகளுக்கும், திறமைகளுக்கும் உரிமைகளுக்கும் குரல்கொடுத்துவரும் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் தனது மற்றுமொரு முயற்சியாக பெண்களின் காதல் கவிதைகளை "உயிர்வெளி" கவிதைத் தொகுப்பாக வெளியிட்டுள்ளது இதன் ஒவ்வொரு பிரதியின் விலை 60/= யாகும்.

---

## எமது வெளியீடுகள்

பெண்களின் வாசிப்புத்திறனை வளப்படுத்தி அவர்கள் எழுத்தாற்றலை வெளிக்கொண்டுவரும் முகமாகவும் பெண்ணிலை வாதக் கருத்துக்களை சகல மட்டங்களிலும் அறிமுகம் செய்யும் முகமாகவும்சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் பின்வரும் வெளியீடுகளைச் செய்து வருகின்றது.

பெண் இதழ் வருடம் நான்கு தொகுதிகள்
மாக்சியமும் பெண்நிலை வாதமும்.
கனல் கவிதைத்தொகுதி
உயிர்வெளி கவிதைத்தொகுதி
"பெண்களின் குரல்" ஒலி நாடா
பெண்கள் செய்தி மடல்

*இவ்விதழ்களைப் பெற விரும்புவோர் எம்முடன் கடிதம் மூலமாகவோ தொலைபேசி மூலமாகவோ தொடர்பு கொள்ளலாம்.*







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "யாவரும் கேளீர்"

## இனங்களுக்கிடையிலான நல்லுறவை வளர்க்கும் ஒன்றுகூடல்



இனங்கள் மத்தியில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் கொழும்பிலுள்ளபெண்கள் தொடர் பூடகக் கூட்டமைப்பின் ஏற்பாட்டின் கீழ் சிங்கபுர எல்லைப்புற கிராம மக்களும், கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனங்களின் கூட்டமைப்பும் இணைந்து 30-02-2000 அன்று "ஸ்ரீலங்கா சுமித்திர" யோவில் ஒன்றுகூடல் நிகழ்ச்சி ஒன்றை நடத்தியது.

இதில் சிங்கபுர கிராமத்தில் 5 பெண்கள் அமைப்புக்களில் இருந்து நாற்பது பெண்களும் கிழக்குப் பிராந்திய பெண்கள் நிறுவனக் கூட்டமைப்பில், ஆறு அமைப்புக்களில் இருந்து இருபது பெண்களும் கலந்து கொண்டனர்.

## முன்வைக்கப்பட்ட கருத்துக்கள்

"பாதுகாப்பிற்காக" என்ற செயற்பாட்டால் நாகரீக மற்ற முறையில் எம் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றது. தற்போது "பாஸ்" நடை முறையை கிழக்குப் பகுதியிலும் திணிக்க அரசு முயல்கின்றது. நாம் இன்றுவரை எதிர் நோக்கும் பிரச்சினைகளுடன் இதுவும் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும். மட்டக்களப்பு மாவட்டத்தில் புகுத்த விருக்கும் பாஸ் நடை முறையை நிறுத்த வேண்டும். நாம் ஒன்றிணைந்து ஒற்றுமையாக வாழ வேண்டும். இருவின, பெண்கள் அமைப்பும் ஒன்றிணைந்து ஜனாதிபதிக்கு அறிக்கை ஒன்றை அனுப்ப வேண்டும்.

**தயா**

**உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம்.**

இரு இனங்களின் இரத்தமும் ஒன்றுதான். சிங்களவர் களுக்கு இருக்கும் உரிமைகள் அனைத்தும் தமிழர் களுக்கும் உண்டு. தாய், சகோதரபாசம் எல்லோருக்கும் ஒன்றுதான். ஆண், பெண் பிள்ளைகள் வன்முறைக் குள்ளாக்கப்படும் போது ஏற்படும் வைராக்கியத்தால் தான் இந்த யுத்தம் நீடிக்கின்றது. கிழக்கு சகோதரி களுக்கு எம்மால் எப்படியான உதவிகளும் செய்யத் தயாராக உள்ளோம். எதிர்காலத்தில் நாம் தமிழ் சகோதரிகளுடன் கைகோர்த்து ஒற்றுமையாக வாழ வேண்டும்.

**சேபாலி**

**பெண்கள் தொடர்பூடகக் கூட்டமைப்பு**

எங்களை, கொழும்பு பெண்கள் கூட்ட மைப்பைச் சேர்ந்த சகோதரிகள், அன்புடன் வரவேற்றனர். இச்சந்திப்பு மிக மகிழ்ச்சியாக இருந்தது. தொடர்ந்து எம் ஒற்றுமை நிலைக்க வேண்டும்.

**சோமா**

**பெண்கள் அபிவிருத்தி மன்றம**



"ஒருவரை ஒருவர் சந்தியுங்கள்
சந்தேக முகத்துடன் வேண்டாம்
சந்தோஷ முகங்களுடன்"

யுத்தம் வர்த்தகமாகிவிட்டதோடு மக்களின் ஆரோக் கியமும் கெடுகின்றது. இவ்விடயங்களை உணர் வுபூர்வமாக உணர்ந்தால் எம்மை யாரும் உடைக்க முடியாது. நன்மையில்லாத சந்தேகப் பார்வைகள் நாட்டுக்குப் பெரும் கெடுதியை உருவாக்குகின்றது. இச் சந்திப்பும், சிங்கபுர சகோதரிகளின் உணர்வு பூர்வமான கருத்துக்களும் மிக மகிழ்ச்சியாக இருக் கின்றது.

**ஜெயந்தி**

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்.**

பெண்கள் எல்லோரும் ஒன்றுசேர வேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது. நாம் எல்லோரும் ஒன்றிணைந்து முன்நோக்கி செல்ல வேண்டும் இதற்கான உதவிகள் அனைத்தும் நாம் செய்யத் தயாராக உள்ளோம்.

**உதயகுமார**

**சிங்கபுர பெண்கள் அமைப்பு**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சகோதரிகளின் அனுபவப் பகிர்வுகளை செவிமடுத்த எனக்கு தமிழ் சகோதரிகள் மீது நிறைந்த பற்றும் அனுதாபமும் ஏற்பட்டது. எனக்குப் பல தமிழ் நண்பர்கள் உள்ளனர். இந்த யுத்த சூழலால், அவர்களுடைய நல்ல நட்பை இழந்துவிட்டேன்.

**ஜெயவீர**
**பொலநறுவை மாவட்டப் பெண்கள் அமைப்பு**

இச்சந்திப்பில் நல்ல நட்புறவையும், சகோதரத்துவத்தையும் உணர்வு பூர்வமாக தமிழ் சகோதரிகளுடன் அனுபவித்தோம். எம் இலக்கு சமாதானம்.

**சாந்தினி கேர**
**பொலநறுவை மாவட்டப் பெண்கள் அமைப்பு**

# சூரியா நூலகம்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் ஒரு நூல் நிலையம் உண்டு. இங்கு பெண்கள் தொடர்பானவையும், ஏனைய சமூக விஞ்ஞானம் தொடர்பான நூல்களும் உள்ளன. இத்துடன் பெரும்பாலும் பெண்கள் எழுதிய நாவல்கள், சிறுகதைத் தொகுப்புக்கள், கவிதைத் தொகுதிகள் ஆகியவற்றையும் சூரியா நூலகம் தொகுத்து வைத்திருக்கின்றது. பெண்கள் சம்பந்தமான சஞ்சிகைகளும் சமகால தகவல்களைக் கொண்ட பிரசுரங்களும் சூரியா நூல் நிலையத்தில் உள்ளன. இவை தவிர தமிழ் தினசரிப்பத்திரிகைகளையும் நூல் நிலையம் தருவிக்கின்றது. சாதாரண வாசகரில் இருந்து சமூக விஞ்ஞான துறைகள், பெண்ணியல் ஆய்வுகள் ஆகியவற்றில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் பல்கலைக்கழக மாணவர் ஆய்வாளர் வரை பலருக்கும் இங்குள்ள நூல்களும் ஆவணங்களும் பயன்படக் நுடியவை. பெண்கள் தொடர்பான விபரண வீடியோப் படங்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் ஆகியவையும் உள்ளன.



இந்நூல் நிலையம் பூரணை தவிர்ந்த ஏனைய நாட்களில் முற்பகல் 9.00 மணியில் இருந்து பிற்பகல் 5 மணிவரை திறந்திருக்கும்.

நூலகத்தைப் பயன்படுத்துவதற்குக் கட்டணங்கள் ஏதும்இல்லை.

## தவறுக்கு வருந்துகின்றோம்






ஏப்ரல் மாதம் வெளியீடான பெண்கள் செய்திமடல் 2:1 இல் பிரசுரமான "சந்தோஷமாய்ப் பாடப் போகிறோம்" என்ற பாடல் யாரால் இயற்றப் பட்டது எனக் குறிப்பிடத் தவறிவிட்டோம். இப்பாடல் சூரியா கலாசாரக் குழுவால் இயற்றப்பட்ட பாடலாகும்.

# நிருவாக முகாமைத்துவமும் தந்திரோபாய திட்டமிடலுக்கான தலைமைத்துவப் பயிற்சியும்.

"நிருவாக முகாமைத்துவமும், தந்திரோபாய திட்டமிடலுக்கான தலைமைத்துவப் பயிற்சியும்" என்ற தலைப்பின் கீழ் கொழும்பு பெண்களுக்கான வளர்ந்தோர் கல்வி நிலையத்தின் அனுசரனையுடன் 06-19.05.2000 வரை பெண்களுக்கான வளர்ந்தோர் கல்வி நிலையத்தில் இப்பயிற்சி வகுப்பு நடந்தது. இப்பயிற்சி வகுப்பில் நாட்டில் பல பாகங்களில் வேலை செய்யும் நிறுவனங்களில் இருந்து 22 அங்கத்தவர்கள் கலந்து கொண்டனர். இவ்வகையில் சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தின் கலாசாரக் குழுவில் இருந்து நான்கு சகோதரிகள் இவ்வகுப்பில் கலந்து கொண்டோம். அங்கு பின்வரும் தலைப்புகளில் பயிற்சிகள் வளங்கப்பட்டன. நிறுவன அபிவிருத்தியும் அது தொடர்பான மாற்றமும், தந்திரோபாயத் திட்டமிடல், பெண் எழுத்தாளர்கள், நிதி முகாமைத்துவம், வள அபிவிருத்தி செயலாக்கத்திற்கான திட்டம், ஒருங்கமைப்பு, தகவல் தொடர்பு, உளவளத் துறை, பால்நிலையியல், உத்தேசத்திட்டம் போன்றனவாகும்.

கிராமங்களுக்குள் வாழும் பெண்களை சகல துறைகளிலும் வலுவுள்ளவர்களாக்கி, இவர்கள் மூலம் அவர்களது கிராமம் முன்னேற வேண்டும். என்ற நோக்கில் கிராமங்களில் வேலை செய்யும் எங்களுக்கு இப்பயிற்சி மிகவும் பயனுள்ள வகையில் அமைந்தது. கிராமப் பெண்களுடன் புதிய நுட்பங்களை எவ்வாறு கையாள்வது, மக்களை இலகுவாக அணுகும் முறை, சுய திறமைகளை வளர்ப்பதும், வெளிக்கொணர்வதும் முதலிய விடயங்களைத் தெரிந்துகொள்ள இப்பயிற்சி உதவியது.

**தகவல் – ஜெயராணி**
**சூரியா கலாசாரக் குழு**

*மழயினில் தவழும் என் பிள்ளாய்*
*மழயினில் தவழும் என் பிள்ளாய்*
*இருள் சூழ்ந்த உலகிலே ஒளியிங்கு இல்லை*
*பிறந்த நாள் முதலிலே ஓய்விங்கு இல்லை*
*ஆரிராரோ ஆரிரரோ......*

*பெண்ணாக நான் ஏன் பிறந்தேனோ*
*பெண்ணாக நான் ஏன் பிறந்தேனோ*
*என்குறை கேட்பாய் நீ எந்தன் கண்ணே*
*சொல்லிட யாரும் இல்லையே கண்ணே*
*ஆரிராரோ ஆரிரரோ ......*

*எத்தனை ஆசை நெஞ்சினிலே*
*அடக்கியே என்னைப் பூட்டிவைத்தார்*
*பெண்ணாகப் பிறந்ததால்*
*பேதைக்கு இந்நிலை*
*பெண் என்று சொன்னால்*
*பிணமென நினைப்பார்*
*ஆரிராரோ ஆரிரரோ ......*

*படித்திட நானும் ஆசைப்பட்டேன்*
*பாதகம் என்றே தடை விதித்தார்*
*சிறைக்குள்ளே என்னை அழுதிட வைத்தார்*
*தாண்டிட முடியா விலங்கினைப் போட்டார்.*
*ஆராரோ ஆரிரரோ ......*

*தூங்கிய காலம் இனிப்போதும்*
*சிறைகளை உடைத்து வர வேண்டும்*
*புதுமைப் பெண்ணென பெயரினை எடுத்து*
*இருந்திட வேண்டும் என்மகள் நீயும்.*
*ஆரிராரோ ஆரிரரோ ......*

*பழமையான பழக்கமெல்லாம்*
*பார்த்து நீயும் அடங்காதே*
*உணர்வுகொண்ட உயிரம்மா நீயும்*
*துணிவுடன் வாழ உடன் வர வேணும்*
*ஆரிராரோ ஆரிரரோ ......*

**கலாசார குழுப்பாடல்**


## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

**46/2, பழையவாடி வீட்டுத் தெரு,**

**மட்டக்களப்பு.**

**தொ. பே. இல : 23297**


முகவரி ..............................................................
..............................................................
..............................................................
..............................................................
..............................................................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்